பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

09 08 2026 7 15

ஞாயிற்றுக்கிழமை இரவு
ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்றவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் கலந்துரையாடினார்.

2. தேசிய தேர்வு முகமையின் செயல்பாடுகள் குறித்து மத்திய கல்வியமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

3. மத்தியப்பிரதேசத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

4. அமெரிக்காவுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈரான் ஈடுபடவில்லை என்று அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

5. இலங்கை லெவன் அணிக்கு எதிரான 3 நாள் பயிற்சி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

- இனி விரிவான செய்திகள் -

<<<<>>>>

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்றவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்துரையாடினார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் வீர ர்களின் அனுபவங்களை பிரதமர் கேட்டறிந்தார்.

கிளாஸ்கோவில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா 13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எந்தவொரு நடவடிக்கையையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்பதற்கு ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை எடுத்துக்காட்டாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

தில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக பாதுபாப்பு படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது என்று அவர் தெரிவித்தார்.

உடல்நலனை சீராக பராமரிப்பதற்கு இளையோர் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தேசிய தேர்வு முகமையின் செயல்பாடுகள் குறித்து மத்திய கல்வியமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், தேர்வு நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுவது குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

தேசிய தேர்வு முகமையை வலுப்படுத்தும் நடவடிக்கை குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

<<<<>>>>

ஞாயிறுதோறும் சைக்கிள் பயிற்சி இயக்கத்தில் இதுவரை 30 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் Hanol-ல் நடைபெற்ற இந்த இயக்கத்தில பங்கேற்று அவர் பேசினார்.

இந்த இயக்கத்திற்கு மக்களின் ஆதரவு அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

போதைப்பொருள் ஒழிப்புக்கான விழிப்ணர்வு நடவடிக்கைகளில் இளையோர் கூடுதலாக பங்கேற்க வேண்டும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ ஒரு கோடியே 25 லட்சத்துக்கும் கூடுதலான விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஒரு கோடிக்கும் மேற்பட்ட ஒதுக்கீடுகள் பெண்களின் பெயர்களில் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தின் வளர்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தனி கவனம செலுத்தி வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

இன்று போபால் விமான நிலையத்தில் இருந்து புதிய விமான சேவைகளை சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடுவுடன் இணைந்து தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கடந்த 3 ஆண்டுகளுக்குள் Datia, Satna மற்றும் Rawa-வில் புதிய விமான நிலையங்கள் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

இதற்கான ஒப்புதல்களை மத்திய அரசு விரைவாக வழங்கியதாகவும் திரு. மோகன் யாதவ் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜார்கண்டில் தேர்வு முறைகேடு தொடர்பாக போராட்டம் மேற்கொண்டு வரும் மாணவர்கள் தங்களது பிரச்சினைகளுக்கு பேச்சுகள் மூலம் தீர்வு காண வேண்டும் என்று அம்மாநில ஆளுநர் திரு. சந்தோஷ்குமார் கங்குவார் கேட்டுக்கொண்டுள்ளார்.

ராஞ்சியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாணவர்களின் நலனில் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரனுக்கு அக்கறை உள்ளதாக கூறினார்.

முதலமைச்சர் அளிக்கும் உறுதி மொழிகள் மீது மாணவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றும் திரு. சந்தோஷ் குமார் கங்குவார் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சர்கள் இடையிலான பேச்சுகள் ராஞ்சியில் இன்று மாலை நடைபெற்றன.

இந்தப் பேச்சுகளுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில அமைச்சர் திரு. Sudivya Kumar, தேர்வு முறைகேடு தொடர்பான வழக்கை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்தப்படும் என்றார்.

இது தொடர்பான வழக்குகளில் 90 நாட்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுமு என்றும் அவர் கூறினார்.

தேர்வு முறைகேடு தொடர்பான நிதிப் பரிமாற்றம் குறித்து அமலாக்கத்துறை விசாரணைக்குப் பரிந்துரைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இருப்பினும் தங்கள் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை என்றும், போராட்டம் தொடரும் என்றும் மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியில் பழங்குடியினர் முக்கிய பங்கு வகிப்பதாக ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

சர்வதேச பழங்குடியினர் தினத்தையொட்டி, இன்று விஜயவாடாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டால் பழங்குடியினர் எந்தவொரு உயரத்தையும் எட்டுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இதற்கு எடுத்துக்காட்டாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு திகழ்வதாகவும் திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

பட்னா, கொல்கத்தா, மும்பை மற்றும் பஞ்சாப் - ஹரியானா உயர்நீதிமன்றங்களுக்கான தலைமை நீதிபதிகள் நியமனத்திற்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி திரு. காமேஷ்வர் ராவ் பட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும், மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. Ravindra Ghuge, கொல்கத்தா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும், நியமிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. Mahesh Chandra Tripathi, மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும், பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற நீதிபதி திரு. அஷ்வினி குமார் மிஸ்ரா அதன் தலைமை நீதிபதியாகவும் நியமிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டிருந்தபோது சிறையில் இருந்தவர்களுக்கு மாதம்தோறும் 10 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று மேற்குவங்க முதலமைச்சர் திரு. Suvendu Adhikari கூறியுள்ளார்.

இன்று கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அவசர நிலையின்போது ஜனநாயகத்தை காப்பதற்காக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எதிர்கொண்ட துயரங்கள் அளவிட முடியாது என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

பெண்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்பான வழக்குகளின் விசாரணை குறித்த காலத்திற்குள் நிறைவடைய வேண்டியதன் அவசியத்தை தேசிய மகளிர் ஆணைய தலைவர் திருமதி Vijaya Rahatkar வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் இது தொடர்பான மண்டல மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

பெண்களுக்கு எதிரான கொடும் குற்றங்களில் ஈடுபடுவோர் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டிது அவசியம் என்றும் திருமதி Vijaya Rahatkar கூறினார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

Dhar மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் கண்டெய்னர் லாரி, கார் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

மணிப்பூரில் 7 தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

மேற்கு இம்பால் மற்றும் Bishnupur மாட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு படையினர் கடந்த 24 மணி நேத்தில் மேற்கொண்ட சோதனையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

நேபாளத்தில் 8 கட்சிகள் இணைந்து புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளன.

JSP, JP, AJP, NUPN, PLP, NSSP, BSPN மற்றும் KRM கட்சிகள் இணைந்து இக்கூட்டணியை உருவாக்கியுள்ளன.

இதற்கு முற்போக்கு கூட்டணி என்று பெயர் கூட்டப்பட்டுள்ளது.

<<<<>>>>

ரஷ்யா மீது யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர்.

Belgorod-ஐ குறிவைத்து யுக்ரைன் இந்த தாக்குதலை நடத்தியதாக ரஷ்யா கூறியுள்ளது.

இதற்கு பதிலடியாக யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

அமெரிக்காவுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈரான் ஈடுபடவில்லை என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. Seyed Abbas Araghchi கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத தெரிவித்தார்.

<<<<>>>>

இலங்கை லெவன் அணிக்கு எதிரான 3 நாள் பயிற்சி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று 207 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியா 4 விக்கெட் இழப்புக்கு 214 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இந்தியா முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 357 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

இலங்கை முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்புக்கு 363 ரன் எடுத்திருந்த நிலையிலும், இரண்டாவது இன்னிங்சில் 6 விக்கெட் இழப்புக்கு 200 ரன் எடுத்திருந்த நிலையிலும் ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

--------------

ஸ்வீடனில் நடைபெற்று வரும் Europe Smash டேபிள் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் Syndrela Doss-ம், இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் Harmeet Desai-ம் வெற்றி பெற்றனர்.

--------------

அஸ்தானா சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இறுதி தகுதிச் சுற்று ஆட்டத்திற்கு இந்தியாவின் Sidharth Rawath, Karan Singh, Sasikumar Mukunth ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

-------------

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் இந்தியா - தென்கொரியா இடையேயான காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டம் சியோலில் அடுத்த மாதம் 18 மற்றும் 19ஆம் தேதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>